அவர்கள், மத்திய அரசும், டெல்லியிலே இருக்கின்ற Corporation-ம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்ததால். . .

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர், மத்திய அரசுக்கெல்லாம் நீங்கள் போய்விட்டு வரும்போது நேரமாகிவிடும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு)

திரு. கூ.ந. சேகரன்: அவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் அவர்களிடத்திலே வைத்திருக்கின்றோம். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மின்சாரத் துறையிலே பணியாற்றுகின்ற 20 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

7. உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் முன்னர் விதித்த இடைக்காலத் தடை செல்லாது என, அத்தடையை நீக்கி உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை பேசுவதற்கு முன்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டுக்கும், இந்திய நாட்டுக்கும் மகிழ்ச்சியான ஒரு செய்தி கிடைத்திருக்கின்றது. சமூக நீதியின் பிறப்பிடம் தமிழ்நாடு என்பதை நிரூபிக்கக்கூடிய வகையிலே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு சமீபத்திலே வெளிவந்தது ஒரு மகிழ்ச்சியான செய்தி. நடுவண் அரசினுடைய உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பது கேள்விக் குறியாக இருந்தது. அந்தக் கேள்விக் குறிக்கு, திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் அமைந்த ஐந்து நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் அமர்வின்மூலம், இன்று சற்று நேரத்திற்கு முன்பு, நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. அதில், உடனடியாக, வரக்கூடிய கல்வியாண்டு முதலே அது நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியும் வெளியிடப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செய்திக்குக் காரணம், நம்முடைய

தமிழக அரசின் சார்பிலே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி (மேசையைத் தட்டும் ஒலி); தமிழக அரசு வழக்குத் தொடர்ந்து, அதில் வெற்றி கிடைத்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில், இந்திய நாட்டில் இருக்கின்ற ஓர் அரசியல் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி இதற்காகச் சிறப்பு வழக்கைத் தொடர்ந்தது. அந்த வழக்கிலேயும், தமிழக அரசு தொடுத்த வழக்கிலேயும் வெற்றி கிடைத்தது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுதான் Judgement-ஐப் பற்றிச் சொல்லிவிட்டீர்களே?

திரு. ஜி.கே. மணி: நடுவண் அரசில் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில், எங்கள் நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், இந்த ஆண்டே அறிவிக்கவேண்டுமென்றும், இதற்கு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் பிரதமரையும், அன்னை சோனியா காந்தி அவர்களையும் வற்புறுத்தி, அதைச் செய்த பெருமை, பாட்டாளி மக்கள் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு, முதலமைச்சர் அவர்கள் உட்பட எல்லோருக்கும் இனிப்பு வழங்கி, மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றோம் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)
(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)
} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. வேல்துரை அவர்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும் (குறுக்கீடு) உங்கள் கட்சிக்காரர்தான் பேசப் போகின்றார். அவர் பேசி முடிக்கட்டும். திரு. வேல்துரை, உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன. நீங்கள் நேராகத் தொகுதிப் பிரச்சினைக்குப் போய்விடவேண்டும்.